**தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை – 06**

ந.க.எண். 46500/ஐ/இ1/2023 நாள்: 02 .09. 2023

பொருள்: பள்ளிக்கல்வி- டாக்டர்.இராதாகிருஷ்ணன் விருது – மாநில தேர்வுக் குழுவால் தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு விருது வழங்கும் விழா - 05.09.2023 நடைபெறுதல் - தகவல் தெரிவிக்க கோருதல் - சார்பு

பார்வை: அரசாணை (1டி) எண். 220 பள்ளிக் கல்வி (பொது - II) துறை நாள்: 05.08.2022

---------

பார்வையில் காணும் அரசாணையின்படி 2022-23 ஆண்டிறகான டாக்டர்.இராதாகிருஷ்ணன் விருது பெறும் ஆசிரியர்களை பல்வேறு தகுகளின் அடிப்படையில் மாநில தேர்வுக் குழுவால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் இத்துடன் இணைப்பில் உள்ளது . அதன் படி தங்கள் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு உரிய தகவல் தெரிவிக்குமாறும் டாக்டர்.இராதாகிருஷ்ணன் விருது வழங்கும் விழா சென்னை-05, சேப்பாக்கம், கலைவாணர் அரங்கத்தில் 05.09.2023 அன்று நடைபெற உள்ளது. இவ்விழாவில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்களால் விருது வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.

எனவே தங்கள் மாவட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் தனியர் சார்ந்து இரண்டு நபர்கள் விழாவில் கலந்து கொள்ள தெரிவிக்கப்படுகிறது.. தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்கள் 05.09.2023 அன்று காலை 10.00 மணியளவில் சென்னை-05, சேப்பாக்கம், கலைவாணர் அரங்கத்தில் தங்கள் பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும். தேர்வு செய்யப்பட்ட ஆசிரியர்கள் மீது காவல் துறையில் குற்றவியல் நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என்பதை மீளவும் உறுதி செய்துகொள்ளுமாறு அனைத்து முதன்மை அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட விவரங்களை உறுதி செய்து கொண்டு அதன் பின்னர் ஆசிரியர்களை சார்ந்த பள்ளியிலிருந்து விடுவித்து தகுந்த அத்தாட்ச்சி கடித்தத்துடன் இவ்விழாவில் தவறாமல் கலந்து கொள்ள அனுப்பி வைக்குமாறு அனைத்து முதன்மை அலுவலர்களுக்கும் தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு:

டாக்டர்.இராதாகிருஷ்ணன் விருது -

பெயர் பட்டியல்

பள்ளிக் கல்வி இயக்குநருக்காக

பெறுநர்,

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

02.09.2023

நகல்: அரசு முதன்மைச் செயலர், பள்ளிக் கல்வித், துறை,தலைமச் செயலகம், சென்னை - 09 தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர் தலைமச் செயலகம், சென்னை - 09 தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.